முழுப் பதிப்புரிமையுடையது.

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

**மட்டம் II பரீட்சை – 2022 சனவரி**

# (204) வணிக முகாமைத்துவம்

# (Business Management)

2022-03-20
மாலை
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (**தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்**):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 06
வினாக்கள் : 07

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *தொடக்கம்* ***1.5*** *வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக..*

**1.1** கீழ்வருவனவற்றுள் ரொபேட் எல். கேட்ஸ் (Robert L. Katz) இன் கூற்றிற்கிணங்க, இடை மட்ட மற்றும் கீழ் மட்ட முகாமையாளர்களுடன் ஒப்பிடுகையில் மேல் மட்ட முகாமையாளர்களுக்கு மிகவும் அவசியமான முகாமைத்துவத் திறன்களாக இருப்பவை எவை?

(1) நேர முகாமைத்துவத் திறன்கள் (2) மானிடத் திறன்கள்
(3) தொழில்நுட்பத் திறன்கள் (4) எண்ணக்கரு சார்ந்த திறன்கள்

**1.2** கீழ்வருவனவற்றுள் எது ஒரு சிறந்த தகவலின் **அம்சமன்று**?

(1) தொடர்புடைமை (2) கிரய விளைதிறன்
(3) சிக்கலான தன்மை (4) பூரணத் தன்மை

**1.3** கீழ்வருவனவற்றுள் மனித வள முகாமைத்துவத்தின் (HRM) வெகுமதிகளைத் தீர்மானிக்கின்ற வெளிவாரியான காரணியாக (external determinant) அமைவது எது?

(1) தொழிலின் பெறுமதி (2) நிறுவனத்தின் நட்டஈட்டுக் கொள்கை

(3) வாழ்க்கைச் செலவு (4) தொழில்தருநரின் கொடுப்பனவு ஆற்றல்

**1.4** கீழ்வருவனவற்றுள் இரு – காரணி ஊக்கப்படுத்தல் கோட்பாட்டின் ஒரு சுகாதாரக் காரணிக்கான உதாரணமாக அமைவது எது?

(1) தொழில் முன்னேற்றம் (2) பணி நிலைமை

(3) ஏற்பிசைவு (4) சவாலான வேலை

**1.5** “முகாமைத்துவம்” தொடர்பான கீழ்வரும் கூற்றுகளைக் கவனத்தில் கொள்க :

**(a)** இது வளங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதன் மூலம் நிறுவன இலக்குகளை பயனுறுதிமிக்க வகையில் அடைந்து கொள்கிறது.

**(b)** இது வளங்களின் விரயத்தைக் குறைப்பதுடன் செலவையும் குறைக்கிறது.

**(c)** இது ஒரு சிறந்த நிறுவனக் கட்டமைப்பை விருத்தி செய்வதற்கு உதவுகிறது.

மேலுள்ளவற்றுள், முகாமைத்துவத்தின் நன்மைகளாவன :

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம் (2) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்

(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம் (4) மேற்கூறிய யாவும்.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

*வினா இல.* **1.6** *தொடக்கம்* **1.10** *வரை உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு, அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சொல் / சொற்களைத் தேர்ந்தெடுக்கவும். வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் / சொற்களை உங்கள் விடைப் புத்தகத்தில் எழுதவும்.*

**1.6** ………………….. *(வினைத்திறன் / உற்பத்தித்திறன்)* என்பது ஒரு குறித்த நேரத்திலுள்ள உள்ளீடுகளுக்கும் வெளியீட்டிற்குமிடையிலான தொடர்பினைக் குறிக்கிறது.

**1.7** ………………….. *(விற்பனை செய்தல் / உருவாக்குதல்)* எண்ணக்கருவில், வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களை மையமாகக் கொண்டு பொருள்கள் விற்பனை செய்யப் படுகின்றன.

**1.8** தேவைக் கூம்பகக் கோட்பாட்டின்படி, ………………….. *(சமூகத் / சுய – மெய்யாக்கத்)* தேவைகள் நோக்கம் கொண்ட வாழ்க்கை முறை, வாழ்நாள் இலட்சியங்கள் போன்ற நீண்ட கால தனிப்பட்ட அபிலாஷைகளை நிறைவேற்றுகின்றன.

**1.9** ஒரு ………………….. *(நோக்கு [vision] / பணி [mission])* கூற்றானது நாளைய நாள் பற்றியும் நிறுவனமொன்று இறுதியில் என்னவாக மாற விரும்புகிறது என்பது பற்றியும் கவனம் செலுத்துகிறது.

**1.10** ………………….. *(தொழில்நுட்ப அபிவிருத்தி / சேவை)* என்பது போட்டரின் பெறுமதிச் சங்கிலியிலுள்ள ஒரு முதன்மை நடவடிக்கையாகும். (01 புள்ளி வீதம், 05 புள்ளிகள்)

*இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களுக்கான விடைகளை, உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதவும்.*

**1.11** நிறுவனக் கட்டமைப்புகளின் இரண்டு (02) வகைகளை நிரற்படுத்துக.

**1.12** சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் என்பதால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

**1.13** உள்ளக ரீதியான ஆட்சேர்ப்புக் கொள்கையிலுள்ள இரண்டு (02) பிரதிகூலங்களைக் குறிப்பிடுக.

**1.14** சந்தைப்படுத்தலில் பயன்படுத்தப்படும் இரண்டு (02) விலையிடல் முறைகளை நிரற்படுத்துக.

**1.15** தந்திரோபாயக் கட்டுப்பாடு மற்றும் செயற்பாட்டுக் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கிடையிலான இரண்டு (02) வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 02

திட்டமிடல் என்பது முகாமைத்துவத்தின் முதலாவதும் மிக முக்கியமானதுமான தொழிற்பாடாகும். இது முகாமைத்துவத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் தேவைப்படுகிறது. மேலும், நிறுவனச் சூழலில் பகுத்தறிவான தீர்மானங்களை எடுப்பதற்கும் இது உதவுகிறது. அத்தகைய தீர்மானங்களை எடுப்பதற்கான விபரமான பகுப்பாய்வை முன்னெடுப்பதற்கும் தர்க்க ரீதியான முடிவுகளை எடுப்பதற்கும் முகாமையாளர்களுக்கு துல்லியமானதும் நம்பகரமானதுமான தகவல்கள் தேவைப்படுகின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) திட்டமிடல் செயன்முறையின் படிமுறைகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) திட்டமிடலுக்கான இரண்டு (02) தடைகளை (barriers) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) தீர்மானங்களை எடுக்கும்போது, முகாமையாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய இரண்டு (02) நிபந்தனைகளை (conditions) **குறிப்பிடுக**.

(02 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

தற்காலச் சூழலில், ஒரு நிறுவனத்தை முகாமை செய்தல் என்பது மிகவும் சவால் மிகுந்த ஒரு பணியாக இருக்கிறது. நாட்டினுடைய பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலைகள் அதேபோன்று உலக பொருளாதாரத்தின் நிலையற்ற தன்மை போன்ற காரணங்களால் சந்தையானது அதிகம் மாறிக் கொண்டிருக்கிறது. முகாமையாளர்கள் மாறுகின்ற சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப தம்மையும் இசைவாக்கிக் கொள்ள இயலுமானவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவர்கள், பயனுறுதிமிக்க போதுமானளவு கட்டுப்பாட்டுடன் எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று வணிகத்தை நடத்திச்செல்ல முடியுமா என்பது பற்றி மதிப்பீடு செய்ய முடியுமானவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) இலங்கையின் தற்காலச் சூழலில் முகாமையாளர்களால் எதிர்நோக்கப்படுகின்ற இரண்டு (02) சவால்களை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) யப்பானிய முகாமைத்துவப் பாணிக்கும் (Style) மரபார்ந்த (மேற்கத்திய) முகாமைத்துவப் பாணிக்கும் இடையிலான மூன்று (03) வேறுபாடுகளை **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(c) நிறுவனமொன்றுக்கு கட்டுப்படுத்தல் ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

உற்பத்தித் துறையின் உற்பத்திச் செயன்முறையானது சந்தைக் கேள்வியை ஈடுசெய்யும் பொருட்டு தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட வேண்டும். உற்பத்தித் துறையில் மட்டுமல்லாது சேவைத் துறையிலும்கூட தொழிற்பாட்டு முகாமைத்துவமானது வணிகத்தை அதன் வெற்றியை நோக்கி வழிப்படுத்துவதில் முக்கிய வகிபாகமொன்றை வகிக்கிறது. சேவைத் துறையில் தொழிற்பாட்டு முகாமைத்துவத்தின் வகிபாகமானது கோவிட் 19 நோய்த் தொற்று காரணமாக சவால்மிக்கதாக மாறி வருகிறது. வணிக நிறுவனத்தைப் பொருட்படுத்தாது, வணிகச் செயன்முறைகளின் பயனுறுதித்தன்மை மற்றும் வினைத்திறனைப் பேணுவதற்கு தொழிற்பாட்டு முகாமைத்துவம் உதவுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) சேவைத் துறையில் செயற்படுகின்ற நிறுவனமொன்று, தொழிற்பாட்டு முகாமைத்துவம் தொடர்பில் எதிர்நோக்குகின்ற மூன்று (03) சிரமங்களை (difficulties) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) சேவைத் துறையில் சிறந்த பெறுமதி சேர்த்தலுக்காக தொழிற்பாட்டு முகாமைத்துவத்தால் பின்பற்றப் படக்கூடிய நான்கு (04) தந்திரோபாயங்களை (strategies) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

மனித வள முகாமைத்துவமானது (HRM) கம்பனியின் மனிதன் சார்ந்த அம்சங்களை ஒருங்கிணைக்கும் நோக்கிலான ஒரு நீண்ட கால தந்திரோபாயமாகச் செயற்படுத்தப்படுகிறது. நிறுவனமொன்றின் சீரான ஓட்டமானது முதன்மையாக அதன் மனித வளங்களின் பலம் மற்றும் நிறுவன நோக்கங்களை அடைந்து கொள்வதில் நிறுவனத்தின் HRM தொழிற்பாடுகள் எவ்வாறு உதவுகின்றன என்பதில் தங்கியிருக்கிறது. நிறுவனம் அதன் மனித வளங்களை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்தும்போது குரல்வழி மற்றும் எழுத்துபூர்வமான தொடர்பாடல் முறைகள் நிறுவனத்தினுள் மிகப் பொதுவானதாக இருக்கின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) தொழிலுக்கு அறிமுகப்படுத்தல் (Induction) என்பது நிறுவனமொன்றிற்கான ஒரு முக்கிய மனித வள முகாமைத்துவத் தொழிற்பாடாகக் கருதப்படுவதற்கான நான்கு (04) காரணங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) நிறுவனமொன்றிற்கு பயனுறுதிமிக்க தொடர்பாடல் (effective communication) ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

கோவிட்-19 நோய்ப் பரவலானது நிறுவனங்கள் தங்களுடைய நிறுவனத் தந்திரோபாயம் பற்றி மீளச் சிந்திப்பதற்கும் நிறுவனத் தந்திரோபாயங்களை மீள வடிவமைப்பதற்கும் வழிவகுத்துள்ளது. இந்த மாற்றம் அவசியமானதாக இருப்பதுடன், முகாமையாளர்கள் தங்களுடைய வகிபாகம் பற்றி மீளச் சிந்திக்க வேண்டியுள்ளதுடன் அவர்கள் தலைவர்களாக மாறவேண்டியுமுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) நிலைமாறு தலைமைத்துவத்தின் (transformational leadership) மூன்று (03) கூறுகளைக் (elements) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) மாற்றத்தின் தன்மைக்கேற்ப, மாற்றத்தின் இரண்டு (02) வகைகளை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) நிறுவனமொன்றின் தந்திரோபாயத்தில் செல்வாக்குச் செலுத்தும் இரண்டு (02) உள்வாரியான காரணிகளை (Internal factors) **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## <u>பகுதி C</u>

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 07

***அதீனா*** என்பது 20 ஆண்டுகளுக்கும் மேலாக கொழும்புப் பிராந்தியத்தில் இயங்கிவரும் முன்னணியிலுள்ள மிகப் பெரிய தனியார் கல்வி நிறுவகம் ஒன்றாகும். சௌகரியமான கல்விச் சூழல், மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் ஏனைய பெறுமதிசேர் சேவைகளை ஒன்றிணைத்ததன் மூலம் இலங்கையில் தனியார் கல்வியை reinventing செய்வதன் ஊடாக ***அதீனா*** அதன் புகழைக் கட்டியெழுப்பியுள்ளது.

ஆரம்ப கோவிட் - 19 காலப்பகுதியில், ***அதீனாவின்*** கண்டி மற்றும் காலி ஆகிய இடங்களில் அமைந்துள்ள அதன் கிளைகளுடன் சேர்த்து, ***அதீனா***வின் பிரதான கட்டடங்களில் சுமார் 7,500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒரே நேரத்தில் இருந்தனர். ஆயினும், இங்கு ஒரே நேரத்தில் சுமார் 15,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இருப்பதற்கான வசதிகள் காணப்படுகின்றன. ***அதீனா*** இலங்கையின் முன்னணி கல்வி நிறுவகங்களில் ஒன்றாகத் திகழ்வதற்கு வழியமைத்துக் கொடுக்கின்ற வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாடுகளை நடத்துவதற்கு High caliber, புகழ்பெற்ற வளவாளர்களை நியமித்துள்ளது.

நிறுவகத்தின் தாபகர் அதன் வெற்றிக்குப் பின்னால் உள்ள பிரதான காரணங்களில் ஒன்றாகத் திகழ்கிறார். அவர் தேவையான தலைமைத்துவத்தை வழங்குகின்ற இந்த நிறுவகத்தின் முழு நேர நிருவாக அலுவலர் ஆவார். நிறுவகம் இன்னும் முறைசார் HRM பிரிவொன்றைக் கொண்டிருக்காததால், அனைத்து ஆட்சேர்ப்பு முடிவுகளும் தாபகரினாலேயே எடுக்கப்படுகின்றன.

கடந்த 20 ஆண்டுகளாக ***அதீனா*** முறையான சந்தைப்படுத்தல் திட்டமொன்றைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் கோவிட் - 19 நோய்ப் பரவல் காரணமாக, நிறுவகம் அதன் சந்தைப் பங்குகளைப் பேணுவதற்கு வசதியளிக்கக்கூடிய டிஜிடல் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) வணிக நிறுவனமொன்றில் வெற்றியை ஈட்டுவதற்கு தலைவர் ஆற்ற வேண்டிய மூன்று (03) முக்கியமான தொழிற்பாடுகள் / வகிபாகங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) ***அதீனா*** போன்ற கல்வி நிறுவகம் ஒன்றிற்கு டிஜிடல் சந்தைப்படுத்தலால் ஏற்படக்கூடிய இரண்டு (02) அனுகூலங்களையும் இரண்டு (02) பிரதிகூலங்களையும் **விபரிக்குக.** (08 புள்ளிகள்)

(c) முறையான மனித வளத் திட்டமிடலிலிருந்து (மனித வலுத் திட்டமிடல்) ***அதீனா***வால் அடைந்து கொள்ளக்கூடிய நான்கு (04) நோக்கங்களைக் (objectives) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(d) தற்போதைய நிலைமையின் அடிப்படையில், ***அதீனா***வுக்கு ஊழியர் ஒருவர் தெரிவு செய்யப்படும் போது, தவறான தெரிவுத் தீர்மானமொன்றினால் ஏற்படக்கூடிய மூன்று (03) பின்விளைவுகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(e) போட்டரின் Generic தந்திரோபாயத்திற்கு இணங்க, கோவிட் 19 இற்குப் பின்னரான சந்தை நிலைமையில் ***அதீனா*** பயன்படுத்தக்கூடிய பொருத்தமான தந்திரோபாயத்தை **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

## செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |

| | | | |
|---|---|---|---|
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |